கெபிதிகொல்லேவ பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெபிதிகொல்லேவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் கெபிதிகொல்லேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு சொந்தமில்லாத நிர்மாணங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினம் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டதன் காரணத்தால் கட்டிட பெறுமதி ரூபா 1,505,717 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | சொத்துக்கள் சரியாக கணக்கிடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்ட மதகு மற்றும் ஏனைய மூலதன சொத்துக்கள் முறையே ரூபா 1,279,297 மற்றும் ரூபா 3,684,692 குறைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. | | |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ஏனைய மீண்டுவரும் அல்லாத செலவினத்திற்காக கிடைப்பனவு (மூலதன செலவின மானியம்) கணக்கின் மீதி ரூபா 45,302,287 ஆன போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 52,536,070 ஆக ரூபா 7,233,783 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சொத்துக்கள் சரியாக கணக்கிடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்து பெறுமானத் தேய்வு மற்றும் மிகையின் குறைபாட்டின் இனங்கண்ட மூலதன செலவின மானியம் ரூபா 1,499,777 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டில் சபை நிதியத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 855,908 ஆன 04 செயற்திட்டங்களிற்காக வெளி நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்த பணம் நானாவித வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | குறித்த தொகை சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கெபிதிகொல்லேவ வாசிகசாலைக்கு சொந்தமான ரூபா 1,695,393 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | அனைத்து சொத்துக்களையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களிக்குரிய பெறுமதிகள் மற்றும் நேரொத்த அறிக்கைகளில் காட்டப்படும் பெறுமதிகளிற்கு இடையில் ரூபா 26,304,483 ஆன வித்தியாசமானது. | ஏற்றுக் கொள்கிறேன். | அட்டவணைகளின் வித்தியாசத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 366,486,530 ஆன 03 கணக்கு விடயங்களிற்கு உரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள மீதிகளை உறுதி செய்யும் சான்றுகளை முன்வைக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 பிரிவுகள் | சபையின் செயற்பாடுகள் மற்றும் வருமானம் ஈட்டும் செயற்பாடுகளிற்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருந்த 11 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் தின ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் 2015 ஆண்டு முதல் தயாரித்து சமர்பித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | சபைக்கு சொந்தமான 04 செயற்படும் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை செய்திருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 8,156,102 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 34,496,972 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய ரூபா 239,560 ஆன நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சபையினால் டென்டர் குத்தகை வழங்கியிருந்த 15 இஸ்தானங்களிலிருந்து 01 இற்கும் 08 இற்குமிடையிலான காலமாக அறவிட வேண்டியதாகவுள்ள ரூபா 3,995,589 ஆன நிலுவை குத்தகை வாடகை மற்றும் 21 தற்காலிக கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 173,250 ஆன நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iii) | வாகனங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய ரூபா 1,113,621 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | | |

(ஆ) **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 26 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 82,800 ஆன நிலுவை முச்சக்கர வண்டி தரிப்பிட கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று காரணமாக அறவிட முடியாத தொகையை 2022 ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | யகாவெவ நீர் கருத்திட்டத்திற்குரியதாக அறவிட வேண்டிய நிலுவை ரூபா 102,183 ஆன நீர் பட்டியல் மற்றும் நிலுவை இணைப்புக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்ாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 12,187,318 ஆன சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பழுதடைந்த நிலையிலுள்ள போதும் அவ் வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்காது பாதுகாபற்றதாக சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன். | இவ் வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 11 வாகனங்களிற்காக வருமான அனுமதிப்பத்தரம் பெற்றிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | வாகனங்களிற்காக வருமான அனுமதிப்பத்தரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பெறுமதி ரூபா 3,768,818 ஆன 11 வகை சொத்துக்கள் கடந்த 06 வருடகாலமாக விளைவற்று நிலவின. | ஏற்றுக் கொள்கிறேன். | குறித்த சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் ஒன்றுசேரும் திண்ம கழிவுகள் வகைப்படுத்தப்படாது திரட்டப்பட்டு கெபிதிகொல்லேவ பிரதேசத்தில் காணப்படும் பற்றைக் காட்டுப் பிரதேசமொன்றுக்கு வெளியிட்டு தீ மூட்டப்படுகின்றன. | எதிர்காலத்தில் இந் நிலைமையை சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கழிவுகளை முறையாக வெளியிட மற்றும் இயற்கை பசளை உற்பத்தியை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |